# 11 "எண்ணு – இணை – பகிர்": குழுக் கலந்துரையாடல் ஒன்றுக்குத் தன்னை ஏற்பாடு செய்தற்கு ஒரு மாற்று நடைமுறை

**இலக்கு**

*ஒரு கலந்துரையாடல் பற்றிய கண்ணோட்டத்தையும், தலைப்பு ஒன்றுக்கு இணைந்த முறையில் தங்கள் பங்களிப்புகளைத் திட்டமிடவும் மாணவர்கள் ஒரு கூட்டுறவுக் கற்கை நடைமுறையால் பக்கத்துணை பெறுவர்.*

தரம் 1 - 6 | 15 - 40 மணித்துளிகள்

**குறிப்புகள்:**

- "எண்ணு – இணை – பகிர்" என்பது நன்கறியப்பட்ட பரவலாகப் பயன்பாட்டில் உள்ள ஒரு கூட்டுறவுக் கற்கை வடிவமாகும். இதில் மூன்று படிகள் உள்ளன:

  1. சுயமாக எண்ணுதல் (சுயமாக)
  2. இருவராக அல்லது மூவராக முடிவுகளைப் பற்றிக் கலந்துரையாடல்
  3. கூட்டு முடிவுகளை முழு வகுப்புக்கும் எடுத்துரைத்தல்.

  பேச்சுக் கல்வியில் இந்த நடைமுறையைப் பயன்படுத்துவதனால், மாணவர்கள் குழுக் கலந்துரையாடல்களில் அறிமுகப்படுத்துதற்கு முன்னரே தங்கள் சிந்தனைகளையும், பங்களிப்புகளையும் திட்டமிடத் துணைசெய்கிறது.

- இந்தப் பயிற்சியும், #10 பயிற்சியும் மிகவும் நெருக்கமான தொடர்புடையன. இப்பயிற்சியை இங்கு தனியாக வேறுபடுத்திக் காட்டியதற்கு காரணம், பல மாணவர்கள் "சிந்தித்தல் – இணைதல் – பகிர்தல்" என்ற முறையினை வேறு சூழலில் (வழமையான வகுப்புகள், வேறு பாடங்கள்) ஏற்கெனவே அறிந்திருப்பதனாலேயாகும். மூன்று படிகளையும் குறிப்பாக தெளிவுடன் பெயரிட்டு வேறுபடுத்துவதே இங்கு நோக்கமாகும்.

---

**நடைமுறை:**

- ஆசிரியர் கலந்துரையாடற் தலைப்பை அறிவிக்கிறார்(எ.கா. பார்க்கவும் #10)
- படி "எண்ணுதல்": மாணவர்கள், தனித்தனியாக, தலைப்புப் பற்றிய தங்கள் மன எண்ணங்களை ஒரு தாளில் எழுதுவர். மாணவர்க்கான வழிகாட்டு வினாக்கள் (பலகையில் எழுதலாம்):
  - உரையாடலின் தலைப்பு என்ன? அதன் நோக்கம் என்ன?
  - இக் கருப்பொருளினால் உங்களுக்கு எத்தகைய எண்ணங்களும் காட்சிகளும் ஏற்படுகின்றன?
  - ஏற்கனவே இத் தலைப்புத் தொடர்பாக நீங்கள் பெற்ற பட்டறிவுகள் என்ன?
  - இத் தலைப்புப் பற்றி ஏற்கெனவே உங்களுக்கு என்ன தெரியும்?
  - உங்களுக்கு இக்கருப்பொருளில் இனறியமையாதவை எவை?
  - இக்கருப்பொருள் தொடர்பாக எத்தகைய வினாக்கள் உங்களுக்கு ஆர்வமுடையனவாக உள்ளன?
- படி "இணைதல்": இருவராக அல்லது மூவராக, மாணவர்கள் அவர்களின் குறிப்புகளின் துணையுடன் தங்கள் எண்ணங்களைத் தெளிவுபடுத்துவர். உசாவல்களாலும் விளக்கங்களாலும் தெளிவற்றவைகளை அவர்கள் தெளிவாக்கி நீக்க முயல்வர். அவர்களின் முதல்மொழி தொடர்பான வினாக்களும் சிக்கல்களும் (தவறவிட்ட சொற்கள் முதலியன) முன்னிலைப்படுத்தப்படும்.
- படி "பகிர்தல்": மாணவர்கள் வட்டமாக அமர்ந்து, தங்கள் எண்ணங்கள், பட்டறிவுகள், வினாக்கள் ஆகியனவற்றை கலந்துரையாடற் குழுவுடன் (எல்லா வகுப்பு அல்லது முழுக் குழுநிலை) பகிர்வார்கள். ஆசிரியர் அல்லது முடியுமானால் ஒரு மாணவர் கலந்துரையாடல் சுற்றினை வழிநடத்த வேண்டும்.
- முடிந்தால், (அ) செயற்பாட்டின் தனித்தனி படிமுறைகள் பற்றி, (ஆ) கலந்துரையாடலின் தரம் மற்றும் எழக்கூடிய சிக்கல்கள் பற்றி ஓர் உயர் கலந்துரையாடல் நடத்தலாம். இக் கலந்துரையாடலில் மொழி, அது தொடர்பான இடர்கள் பற்றிய வினாக்கள் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டும் (முதல் மொழியில் உரையாடல் தகைமை தொடர்பாக எதனை முன்னேற்றவேண்டும்? எப்படி? ).